தொகுதி ௧
சித்திரம் ௧௨

# பொன்னிவளநாட்டின் வீர சரித்திரம்



# சொர்க வாசல்

www.ponnivala.com

© 2012 Ponnivala Publishing



மறுவர்ணனை
பிரெண்டா பெக். இ
கசாண்ரா கொர்நால்

தமிழாக்கம்
சிவசங்கர் நவரட்ணம்
சத்தியபாமா

சித்திரங்கள்
ரவிசந்திரன & குழு

வடிவமைப்பு
பிரியா கோவிந்தராஜன்
ஸ்டெப்பான் ஹானிஹன்

ஓப்பச்சர்
முலர்விழி ராஜ்

வெளியீட்டாளர்
பொன்னிவளா
பப்ளிகேசன்
© 2012
சாப்ட்சைன்ஸ்
அசோசியேசன் லிமிடட்.





பகுதி-1 சித்திரம்-12

## சொர்க்கவாசல்

குன்னுடையானும், தாமரையும், குழந்தை வரம் வேண்டி இருபத்தியொரு வருட தவத்தை புரிய பல இன்னல்களையும் தாண்டி, காசியை நோக்கி நீண்ட பயணம் மேற்கொண்டனர். மேலும், பயணத்தின் போது உடல் நலிந்து, நடக்க முடியாமல் போன கணவனை, தாமரை தன் முதுகில் சுமந்து சென்றாள். விஷ்ணுவின் அருளாசியினால், இறுதியாக தவம் செய்ய வேண்டிய இடத்திற்கு வந்து சேர்ந்தனர்.



விஷ்ணு,பொன்னிவளநாட்டு தம்பதிகளை பற்றி சிந்தித்தார்...
குன்னுடையானையும், தாமரையையும் பலவழிகளிலும் சோதித்து விட்டேன்.
எல்லா சோதனைகளிலும் வெற்றியடைந்து,சிவனின் இருப்பிடமான கைலாய மலையை தற்போது அடைந்துள்ளனர்.
சிவனின் சாபம் தானே அவர்களுக்கு குழந்தையில்லாமல் செய்தது.
அவர் மனமிறங்கி சாபத்தை போக்க வேண்டும்.


தாமரையும்,குன்னுடையானும், தங்களது இறுதிப்பரிகாரமான, இருபத்தியொரு வருட தவம் செய்வதற்கு புறப்பட்டனர். குழந்தை இல்லை என்ற குறை தீர்ந்துவிடும் என்கின்ற நம்பிக்கையோடு செல்கையில்..
என்ன இது?! வழியில் ஏதோ பெரிதாய் படுத்திருக்கிறது.
கொர்ர்ர்ர்
அது! நாம் வளர்த்த பன்றி தான். ஏன் இங்கே படுத்திருக்கிறது?
உனக்கு அப்பொழுதே சொன்னேன். இதை வளர்க்க வேண்டாம் என்று.
கொர்ர்ர்ர்
மற்ற விலங்குகள் எல்லாம் அவற்றுக்கு வரம் வேண்டி வரும்படி கேட்டன.
ஆனால், நீயே எங்கள் வழியை மறைத்துக் கொண்டு படுத்திருக்கிறாயா?
கோபங் கொண்ட தாமரை பன்றியை எட்டி உதைத்தாள்.
க்தும்ம்ம்
பாதகியே!


உன்னிடம், எனக்கும் வரம் வாங்கி வரச் சொல்வதற்காக காத்திருந்து, தூங்கி விட்டேன்.
ஆனால், நீ என்னை உதைத்து எழுப்பி, கோபப்படுத்தி விட்டாய்.
என்னை மன்னித்து விடு!
நீ காசி பொன்னம்பலத்தில், குழந்தை வரம் வேண்டி தவம் செய்யப் போகிறாயல்லவா?
ஆம்! கடவுளின் கருணை கிடைக்கும் என்று நம்புகிறேன்.
அதேநேரம், நானும் வீரப்பூர் சென்று, கருகாளி அம்மன் கோவிலில்..
இருபத்தியெரு வருடங்கள் தவம் செய்து, வரம் பெற்று உங்களை பழிவாங்குவேன்.
என்ன? நீயும் தவம் செய்யப் போகிறாயா?



ஆமாம்!
நான் வரமாக, வலிமையான கொம்பன் பன்றியை கேட்பேன்.
உர்ர்ர்.
உர்ர்ர்.
அது உன் முத்தமகனை வலது கொம்பிலும்,இளைய மகனை இடது கொம்பிலும்...
குத்தி கொன்று, உங்களின் ஆணவத்தை அடக்கும்.
ஐயோ!
நாம் பட்ட கஷ்டம் எல்லாம் இந்தப் பன்றியால் வீணாகிவிடுமே என பயமாகவுள்ளது.
இல்லை தாமரை. நீ கவலைப்படாதே!
போய் விடு! இங்கிருந்து. இல்லையேல், உன்னை கொன்று விடுவேன்.
சரியான நேரத்தில் இதற்கான தண்டனையை அனுபவிப்பீர்கள்.
உங்களை பழி வாங்காமல் விடமாட்டேன்.


அதோ பாருங்கள்! நம் அரண்மனையின் நாய் வருகிறது.
பன்றி கூறியதை கேட்டு கவலை கொண்ட தாமரையின் முன்னால், இரு காதுகளும் அற்ற அரண்மனையின் நாய் வந்து நின்றது.
தாயே! ஏன் சோகமாக இருக்கிறீர்கள்?
தாமரை நாயிடம் நடந்தவைகளை கூறினாள்.
பன்றி என்னை சபித்து விட்டது.
என் குழந்தைகள் கொடூரமான முறையில் இறப்பார்கள் என்றால், எதற்காக நான் தவம் செய்ய வேண்டும்.
கவலைப்பட வேண்டாம். நீங்கள் எனக்கும் ஒரு குழந்தை வரம் வாங்கி வாருங்கள்.
அது உங்கள் மகன்களுக்கு பாதுகாப்பாக இருக்கும்.
நீ உண்மையாகவா சொல்கிறாய்?
ஆம்! எனக்கு பிறக்கும் குட்டி சிறியதாவும், அதன் பல்லில் அதிக விஷம் இருக்கும் படியும் வரம் வாங்குங்கள்.
அப்படியே வாங்கி வருகிறேன்.
தாமரை! நாம் நெடுந்தூரம் போக வேண்டும். நடக்கலாம் வா.


இருவரும் இரவு பகல் பாராமல் நடந்து சென்றனர்.
குய் குய்
நெடுந்தூரம் நடந்த அவர்கள் ஒரு குடிலை அடைந்தனர்.
குய் குய்
குடிலிலிருந்த முதியவர்களை அணுகி, சிறிதுநேரம் ஓய்வெடுத்து செல்வதற்காக கேட்டனர்.



அம்முதிய தம்பதியினர், அவர்களை மனமகிழ்ச்சியுடன் வீட்டிற்குள் அழைத்தனர்.
ஐயா! நாங்கள் காசிக்கு செல்கிறோம். இங்கே சற்றுநேரம் தங்கி ஓய்வெடுத்து செல்லலாமா?
தாராளமாக! களைப்பாக இருக்கிறீர்கள், முதலில் உணவருந்துங்கள்
உணவளித்ததற்கு மிக்க நன்றி!



குன்னுடையானும், தாமரையும் தங்களின் நகைகளை கழற்றி அவர்களுக்கு கொடுத்தனர்.
இது எங்களுக்கு அவசியப்படாது தாயே!
வாங்க மறுத்த அவர்களை ஒருவாறு இணங்க வைத்து, நகைகளை கொடுத்து விட்டு, பயணத்தை தொடர்ந்தனர்.
நன்றி ஐயா! உங்கள் பயணம் வெற்றியாக அமையட்டும்.
கீ கீ


அவர்கள் மீண்டும் நெடுந்தூரம் நடந்தனர். குன்னுடையான் களைப்பு மிகுதியால் சோர்வடைந்தார்.
ஆ! என் கால்களை முற்கள் குத்தி கிழிக்கின்றனவே.
என்னால் இந்த வெயிலில் கண்களை திறந்து பார்க்க முடியவில்லை.
நான் எப்படி தொடர்ந்து நடக்கப் போகிறேனோ?
வாருங்கள்! சுவாமி
என் கையை பிடித்துக்கொள்ளுங்கள்.
நான் கூட்டிச் செல்கிறேன்.
பயம் வேண்டாம். நான் உங்களுடன் இருக்கிறேன்.


தாமரை! அதே தெரிகிறதே,அது என்ன மலை?
அதுதான் இமயமலை.
இந்தக்கரடு முரடான பாதையை நாம் எப்படி கடந்து செல்வது?
ஏதாவது வழி கிடைக்கும். வாருங்கள்!


குன்னுடையானும், தாமரையும் கரடுமுரடான பாதைகளில் நடந்து வந்ததினால் மிகவும் களைப்படைந்தனர். ஆனாலும் குழந்தை பாக்கியம் அடைய வேண்டும் என்ற ஆவலினால் தொடர்ந்து தங்களையும் மீறி நடந்து கொண்டே இருந்தனர்.
ஷ்ஷ்ஷ்ஷ்ஷ்
ஆஆஆஆ…
ஆஆஆஆ…
நந்ந்ந்ந்
ஷ்ஷ்ஷ்ஷ்ஷ்
அவர்கள் பல துன்பங்களை அடைந்தும், நம்பிக்கையை இழக்கவே இல்லை.


இரவு பகல் என்று பாராமல் பல நாள் நடந்தனர்.
குன்னுடையானின் உடல் நாளுக்கு நாள் மோசமடைந்து வந்தது. அத்தோடு, கருந்தேள் கொட்டியதால் உடல் வலிமையை இழந்தது...



தாமரை! தாமரை!
இறுதியாக, இருவரும் மலையின் அடிவாரத்தை வந்தடைந்தனர். குன்னுடையான் மிகவும் சோர்வடைந்தார். அவரால் நடக்கக்கூட முடியவில்லை. தாமரை உற்சாகத்துடன் நடந்தாள். ஆனால், அதற்கு மேல் தொடர்ந்து நடக்கப் பாதையில்லை.
இதற்கு மேல் நடப்பதற்கு பாதையில்லை. வா! நாம் திரும்பி வீட்டுக்கு சென்றுவிடலாம்.
எல்லா கஷ்டங்களையும் அனுபவித்து, நெடுந்தூரம் வந்து விட்டோம். இனி நாம் திரும்பி செல்லக்கூடாது.
மனம் தளராத தாமரை, குன்னுடையானை ஊக்கப்படுத்தினாள். ஆனால், அவரால் ஒரு அடி கூட எடுத்து வைக்க முடியவில்லை.
உங்களை என் முதுகில் கட்டிக்கொண்டு, இந்த மலையை கடக்கப் போகிறேன்.



தாமரை, குன்னுடையானை தன் முதுகில் தூக்கி சுமந்த படி மலையில் ஏறினாள்.
ம்ம்.........
ம்ம்.......
கைகளினால் பாறைகளை பிடித்து, சரிவுகளில் பெரும் சுமையுடன், மெதுவாக ஏறிச்சென்றாள்.


ஆ.. ஐயோ!.. கைகள் நழுவுகிறதே.. நான் கீழே விழப் போகிறேன்.
தாமரை நம்பிக்கையை இழக்காதே உன்னால் முடியும்!
கீழே விழுந்தால், நாம் இறந்து விடுவோம்.
ஆ.. ஆ.. என் பிடி வழுக்குகிறதே!
ஆ.........
பிடி நழுவி, இருவரும் கீழே விழுந்தனர்.


ஆ.........
அதிஷ்டவசமாக, தாமரை ஒரு மரக்கிளையின் மேலும், குன்னுடையான் பாறையிலும் விழுந்தனர்.
ஆ !
அதேநேரம், மேலேயிருந்து ஒரு பாறை வேகமாக உருண்டு விழுந்தது. தாமரை மிக வேகமாக ஓடிச் சென்று, குன்னுடையானை காப்பாற்றினாள்.
டமார்ர்ர்


ஆனால், பாறை மேல் விழுந்ததால் குன்னுடையான் உயிரிழந்தார்.
ஐயோ!..கடவுளே! என் கணவர் இறந்து விட்டாரா..
உண்மையாகவே! அவர் இறந்து விட்டாரா? பரந்தாமா! குழந்தை வரம் வேண்டி வந்து, கணவனை இழந்து விட்டேனே.
அவர் அப்போதே, சொன்னாரே திரும்பிச் செல்லலாம் என்று, பாவி! நான் தான் கேட்கவில்லை.
இப்போது அவரையும் இழந்து, இனி என்ன செய்யப் போகிறேன்?, என்றும் தெரியவில்லையே?
பரந்தாமா! என் உயிரையும் எடுத்துக்கொள்!
எதற்கும், தண்ணீர் கொண்டு வந்து வாயில் புகட்டிப் பார்ப்போம்!
ஆ.. குயிலும், மயிலும் கூவும், அகவும் சத்தம் கேட்கிறதே!. அருகில், எங்கே குளிர்ந்த சோலை இருக்க வேண்டும். அங்கே போய் பார்க்கலாம்.


தாமரை, அந்தச் சத்தம் வந்த திசையை நோக்கி நடந்து, முடிவாக, ஓர் நீர் நிறைந்த தடாகத்தை வந்தடைந்தாள்.
ஆ...தண்ணீர் நிறைந்திருக்கிறதே!
குளத்தினுள் தாமரை ஓரடி இறங்கும் பொழுது, தண்ணீர் ஈரடியாக கீழே இறங்கியது!
மாயவா! இது என்ன சோதனை?
தண்ணீர் அனைத்தும் என் கண்முன்னே வற்றி விட்டதே!
அவள் கடைசி துளி நீரை சேற்றில் இருந்து எடுக்க முயற்சிக்கும் பொழுது, அருகில் இருந்த அழகிய செடி ஒன்றை பார்த்தாள்.
ஆ..! இந்த செடியின் இலைகளை பறித்து கொண்டுபோய், நசுக்கிப் பிழிந்து கணவரின் வாயில் புகட்டுவோம்.
தாமரை! என் இலைகளை பறிக்கப் போகிறாயா?



என்ன! இது... செடி பேசுகிறதே..
நீ எவ்வளவு முயன்றாலும் என்னிடம் இருந்து நீரைப் பெற முடியாது.
விரைந்து சென்று உன் கணவனை காப்பாற்று!
அங்கே கழுகுகள் அவர் உடலை வட்டமிட்டு காத்திருக்கின்றன!
ஐயோ கடவுளே!
ஏய்!
கழுகுகளே! போய்விடுங்கள்!
ஓ... கடவுளே!
வைகுந்த வாசனே!
எனக்கு, நீ தான் ஒரு நல்ல வழியை காட்ட வேண்டும்!


ஆ...அதோ...
அங்கே... யாரோ.. வருகிறார்களே?
மகா விஷ்ணு! தாங்களா?
நீங்கள் தான் இவையனைத்தையும் செய்தது?
கருணை கொண்டு என் கணவரை காப்பாற்றி அருள வேண்டும்.
தாமரை! உன் கணவர் இறந்து விட்டார்.
என்னால் எதுவும் செய்ய முடியாது.
காஞ்சி நாதா! தாங்கள் மனது வைத்தால் முடியும்.
சரி! என்னுடன் வா!



மகாவிஷ்ணு தன் சக்தியினால் குன்னுடையானுக்கு உயிர் கொடுத்தார். அவரும் பழைய ஆரோக்கியத்துடன் எழுந்து, விஷ்ணுவையும், தாமரையும் பார்த்தார்.
அப்பா! குன்னுடையா நலமாக இருக்கிறாயா? நல்லதே நடக்கட்டும்.
தாமரை! தாமரை! நான் எங்கே இருக்கிறேன்?
குன்னுடையான் மிகவும் குழம்பிய நிலையில் காணப்பட்டார்.
நாதா! பொறுமையாக இருங்கள்.
நானும் விஷ்ணுவும் இங்கே தான் இருக்கிறோம்.


சுவாமி! இந்த மலையை கடந்து செல்ல தாங்கள் தான் உதவி செய்ய வேண்டும்.
சரி! உங்களை நான் ஈயாக மாற்றுகிறேன். முதலில், நீங்கள் மலையை கடந்து செல்லுங்கள்.
பின் நானும் வருகிறேன்.
விஷ்ணு தன் சக்தியால் இருவரையும் ஈயாக மாறினார்கள்.
ஷ்ஷ்ஷ்ஷ்.
ஷ்ஷ்ஷ்ஷ்.
ஷ்ஷ்ஷ்ஷ்.
காடுகளையும், மலைகளையும் கடந்து சென்றனர்.


வெறும் கற்களாக மட்டுமே நிறைந்து இருந்த இடத்தை வந்தடைந்தனர்.
மாயவரே! அது என்ன?
தாமரை! அது கல்லாறு.
அடுத்து வருவது முள்ளாறு...
அதற்கு பிறகு நெய்யாறு...
இறுதியாக நெருப்பாறு இவைகளை நீங்கள் கடக்க வேண்டும்.
தாங்களின் உதவியில்லாமல் எங்களால் இதை கடக்க முடியாது.
ம்..! சரி! நானே வழி செய்கிறேன்.
விஷ்ணு மீண்டும் அவர்களை ஈயாக மாற்றினார்.



ஈயாக மாறிய அவர்கள், முதலில் கல்லாற்றையும் பின்னர் முள்ளாற்றையும் கடந்தனர்.
ஷ்ஷ்ஷ்.
ஷ்ஷ்ஷ்.
மூன்றாவதாக நெய்யாற்றையும். நான்காவதாக கொப்பளித்து அனல் பொங்கும் நெருப்பாற்றையும் வெற்றிகரமாக கடந்து சென்றனர்.
ஷ்ஷ்ஷ்.


ஆறுகளை கடந்த அவர்கள் ஒரு காட்டை வந்தடைந்தனர்.
ஷ்ஷ்ஷ்ஷ்.
ஷ்ஷ்ஷ்ஷ்.
தாமரை! இந்த காடு முழுவதும் விஷநாகங்கள் இருக்கிறது.
நீங்கள் இந்த காட்டை கடக்கும் பொழுது, ஒரு நாகம் வந்து வழியை மறித்து..
உங்களிடம் வரம் ஒன்று வாங்கி வருமாறு கேட்கும்.
நீங்களும் வரம் வாங்கி வருவதாக ஒப்புக்கொள்ளுங்கள்.
இருவரும் விஷ்ணு கூறியதை கவனமாக கேட்டுக் கொண்டு காட்டிற்குள் சென்றனர்.


பெண்ணே!
யார் நீ? எங்கேயிருந்து வருகிறாய்?
நான் பொன்னிவளநாட்டிலிருந்து வருகிறேன்.
என் பெயர் தாமரைக் கவுண்டச்சி, இவர் என் கணவர் குன்னுடையாக் கவுண்டர்.
ஸ்ஸ்ஸ்ஸ்ஸ்...
ஸ்ஸ்ஸ்ஸ்ஸ்...
பெண்ணே! உங்களைப்பற்றி விஷ்ணு என்னிடம் சொல்லி இருக்கிறார்.
நீ காசியில் இருந்து எனக்கு, ஒரு ஆண்குழந்தை பிறக்க வரம் வாங்கி வர வேண்டும்.
விஷ்ணு கூறிய படியே ஒரு நாகம் அங்கே தோன்றி, தாமரையிடம் வரம் வாங்கி வரும்படி கேட்டது. தாமரையும் அதற்கு ஒப்புக் கொண்டாள்.
ஸ்ஸ்ஸ்ஸ்ஸ்...
எதிர் காலத்தில், உன் குடும்பத்திற்கு என் குழந்தை உதவியாக இருப்பார்.
சரி! உன் விருப்பப்படியே வரம் வாங்கி வருகிறேன்.



பொன்னிவளநாட்டு தம்பதியினர், நீண்டதூரம் நடந்து வாயிலுடன் கூடிய படிக்கட்டுகள் நீண்டு செல்லும் ஓர் இடத்தை அடைந்தனர். அப்போது அங்கே வந்த விஷ்ணு...
தாமரை! நீண்டு செல்லும் இந்த படிகளை பார்த்தாயா?
இதுதான் சிவனின் தெய்வசபைக்கு செல்வதற்கான வழி.
தவத்தை நீ மட்டுமே செய்ய வேண்டும். ஆகையால், குன்னுடையானை இங்கேயே கல்லாக்கி விட்டு, அவருடைய உயிரை தங்க பெட்டியில் எடுத்து செல்கிறேன்.
இருபத்தியெரு வருடங்கள் கழித்து உன் தவம் நிறைவடைந்ததும், நான் அவருக்கு உயிரை கொடுத்து, உன்னுடன் அனுப்பி வைப்பேன்.



நல்லது பரந்தாமா! அப்படியே செய்யுங்கள். என் கணவர் நலமாக இருந்தாலே போதும்.
தாமரை! கலங்க வேண்டாம். விஷ்ணு நம்மை காப்பாற்றுவார்.
நீ தைரியமுடன் சென்று தவத்தை நிறைவு செய்து, வரம் பெற்று வா!
விஷ்ணு, குன்னுடையானின் உயிரை தங்க பெட்டியில் இட்டு மூடிய பின் உடலை கல்லாக மாற்றி அங்கேயே இருத்தி விட்டு, தாமரையுடன் படிக்கட்டுகளில் நடக்க தொடங்கினார்.


தாமரையும் விஷ்ணுவும் படிகளின் வழியே நடந்து தெய்வசபையை நோக்கிச் சென்றனர்.
சற்றுநேரத்தில், ஒரு பெரிய கல்லால் ஆன வாயிலை அடைந்தனர். அப்போது, விஷ்ணு தாமரையை எச்சரித்தார்.
தாமரை! தெய்வ சபைக்கு செல்வதற்கு முன்பாக நரகம் இருக்கிறது.
நரகத்தை கடந்து செல்லும் பொழுது, உன் கண்கள் அந்தப் பக்கம் பார்க்கக்கூடாது.


ஐயோ........
ஆ.........
ஐயோ......
ஐயோ......
வேண்டாம்!
ஐயோ...!
ஐயோ என் உடல் முழுவதும் எரிகிறதே!
ஐயோ...
சுவாமி! இவர்கள் எல்லாம் என்ன தவறு செய்தார்கள்?
ஏன் இப்படி நரகத்தில் கஷ்டப்படுகிறார்கள்?



தாமரை! நான் முன்னமே கூறியது போல் எதையும் பார்க்காமல் வா.
நரகத்தில் தவறுகள் செய்த ஆண்களும், பெண்களும் நிறைந்திருந்தனர்.
சிலர் மண்ணாசையினால், பிறரை ஏமாற்றி, நிலங்களை அபகரித்து, அதற்காக கொலை போன்ற மகாபாதகங்களை புரிந்ததினால் தண்டனை அனுபவிக்கின்றனர்.
இன்னும் சிலர் பெண்ணாசையினால், பலாத்காரம், பிறர் மனைவியை விரும்புதல் போன்ற பாவங்களுக்கான தண்டனையை பெற்றுள்ளனர்.



தாமரை! மகாபாரத அர்ச்சுணன் இங்கே தான் தவம் செய்தான்.
நீயும் இங்கே தான் தவம் செய்யப் போகிறாய்.
மிகவும் புனிதமான இடம்!
விஷ்ணு, தாமரை தவம் செய்ய வேண்டிய இடத்திற்கு அழைத்து வந்தார்.
தாமரை, தவம் செய்ய வேண்டிய இடத்திற்கு வந்து விட்டாள். இருபத்தியொரு வருடங்கள் செய்யப் போகும் தவத்திற்கு பலன் கிடைக்குமா? சிவன் அவள் தவத்தில் மகிழ்ந்து சாபத்தை போக்கி அவளுக்கு குழந்தை வரம் அளித்து, அவளையும், குடும்பத்தையும் சந்தோஷப்படுத்துவாரா?

# பொன்னிவளாவை பற்றி ஒரு சிறு தொகுப்பு

பொன்னிவளா ஒரு புரதான பண்டை கால கதை. இக்கதை கிராமத்து உடுக்கை பாடகர்களால் இன்றும் ஆடலும், பாடலுமாக சொல்லப்படும் ஒரு பழங்கதையாகும்.

1965 வருடம் கொங்கு நாட்டில் உள்ள மின்வசதி இல்லாத சிறு கிராமத்தில், ஒலி நாடாவை கொண்டு, 18 இரவுகளில் ஒலி பதிவு செய்யப்பட்ட கதையாகும். முதன் முறையாக, கம்யூட்டர் 2D அனிமேஷனில் 26 தொலைக்காட்சி தொடர்களாக ஊருவாக்கப்பட்டு, பல மொழிகளில் பதிவு செய்யப்பட்டது.

ராஜாங்கம் என்பது அதன் மக்களால்தான் கட்டமைக்கப்படுகிறது. உதாரணமாக குடையுன் பரந்து விரிந்த மேல்பகுதி ராஜாங்கம் என்றால், மக்கள்தான் அதனை தாங்கி நிற்கும் கம்பிகள்.

எனவே ஒரு ராஜாங்கத்தைப்பற்றி சொல்லவேண்டும் என்றால், அந்த ராஜாங்கத்தின் மக்களை பற்றியும் சொல்லவேண்டும். அப்போதுதான் அந்த ராஜாங்கத்தைப்பற்றி முழுமையாக புரிந்து கொள்ள முடியும். இக்கதை கொங்கு மக்களின் கதை. இக்கதை தோராயமாக ஆறாம் நூற்றாண்டில் கொங்கு மக்களின் வாழ்க்கை முறையையும், அவர்களின் சமுதாய மற்றும் நாகரீக வாழ்க்கையையும் சித்தரிக்கிறது.



மேலும் பொன்னிவளாவைப்பற்றி விபரம் அறிய பொன்னிவள இணைய தளத்திற்கு செல்லுகள்
www.ponnivala.com/comic12tamil




வாருங்கள்!

# பொன்னிவள

அங்காடிக்கு

சித்திரக்கதை - HD அனிமேஷன் - விளையாட்டு - வாணிக பொருட்கள் - கேளிக்கை - மேலும் பல இலவசங்கள்!







01. காராளர் தோற்றம்
02. அநாதைச்சிறுவன்
03. நாடு கடத்தல்
04. உரிமையுள்ள காதலி
05. அதிசய கல்யாணம்
06. வருத்த விதை
07. ஆயிரம் யாசகர்கள்
08. கொடிய சாபம்
09. உத்தமியின் கோபம்
10. விரக்தியுன் பலன்
11. சாப நிவர்த்தி
12. சொர்க வாசல்
13. விதியின் கணக்கு
14. கோவில் ரகசியம்
15. உண்மை தெரிந்தது
16. நாடு திரும்புதல்
17. மானம் பெரிதென்று
18. சினம் கொண்ட சின்னவர்
19. சுதந்திரம் வென்றது
20. ஆசீர்வதிக்கப்பட்ட வாள்
21. சாம்புகனின் தந்திரம்
22. புதிய சவால்
23. நேருக்கு நேர்
24. எதிரியின் சவால்
25. பெரும் தியாகம்
26. ஒரு சகாப்தம் முடிந்தது

## 26யும் பெற்றுகொள்ள!

ISBN 978-1-927093-53-5
90000 >
9 781927 093535

www.ponnivalamarket.com
மேலும் விபரங்களுக்கு இணைய தளத்திற்கு செல்க:
www.ponnivala.com

© 2012 Ponnivala Publishing